# அறிவின் கேள்வி

கோரநாதன்

தீச்சுடர் நிலையம்

# அறிவின் கேள்வி

கோரநாதன் எழுதியது

விலை மூன்றணா

விற்பனை உரிமை:

எரிமலைப் பதிப்பகம்

துறையூர் ★ திருச்சி மாவட்டம்

தீச்சுடர் வெளியீடு
முதல் பதிப்பு ஜூன் 1949

பிரசுரம்:
தீச்சுடர் நிலையம்,
சிறுகனூர் P. O.,
திருவானைக்கோவில் வழி,
திருச்சி மாவட்டம்

ஸ்டார் பிரஸ்,
துறையூர், திருச்சி ஜில்லா.

# நாங்கள் சொல்லுவது

"சிந்திக்கும் திறனும், மேதையும் மிகுந்த ஒரு சில தீரர்களுக்கும், அதிக மதப்பற்றும் அறியாமையும் நிறைந்த பெருவாரியான மக்களுக்குமிடையே பெரும் மரணப் போராட்டம் நடந்து வருகிறது, யுக யுகங்களாக. அறிவுக்கும் பக்திக்குமிடையே நிகழும் போர்தான் இது. இந்த ஒரு சிலர் நாவலிக்கிறார்கள் சிந்தனைக்காக, தன்மானத்துக்காக, சட்டத்துக்காக, சுதந்திரத்துக்காக, தேர்ந்து தெரிந்தவைகளுக்காக, இவ்வுலக இன்பங்களுக்காக! ஆனால் எண்ணிலா மற்றவர்களோ தப்பெண்ணத்திற்கு, பயத்துக்கு சித்துவிளையாடல்களுக்கு, அடிமைத் தனத்துக்கு, அறிய முடியாதவைகளுக்கு, இனி என்றோ எங்கோ வரவிருக்கும் துயரங்களுக்குமாக முறையிடுகிறார்கள். இந்த ஒரு சிலர் சொல்கிறார்கள் 'சிந்தியுங்கள் என்று!' 'நம்புங்கள்' என்று ஆக்கிணையிடுகிறார்கள் மிகப் பலர்."

— இப்படிச்சொல்லியிருக்கிறான் இங்கர்சால்.

அவனுக்கு முன்னும், அவனுக்குப் பின்னும் அறிவு வளர்ச்சிக்காக, சிந்தனையின் மேன்மைக்காக. உண்மையின் உயர்வுக்காக உள்ளத்தில் பட்டதை உள்ளபடி உறுதியோடு சொல்லி வந்திருக்கிற அறிஞர்கள் பலர்.

எனினும், கால வெள்ளத்தாலும் அசைக்க முடியாத கரும்பாறைகள் போல் அழுத்தமாக வேரோடியிருக்கும் அச்சம், அறியாமை, நம்பிக்கை பக்தி இவைகள் மீது கண்களை மூடியபடி உட்கார்ந்துகொண்டு உண்மைகளைக் காண மறுப்பவர்கள் பலப்பலர்! இவர்களது எள்ளுதல்களையும்

எதிர்ப்புகளையும் கண்டு மனம் தளராது அறிவின் பாதையில் சிந்தனைத் தீபம் ஏந்தி முன்னேற விரும்புகிறவர்கள் இன்னும் நம்மிடையே உண்டு. இனியும் இருப்பார்கள்.

'சிந்தியுங்கள்!' 'சிந்தனைத் தீப்பொறி சிதறுவோம்; அதனின்றும் அறிவொளி பெருகட்டும்' திக்கெல்லாம் பரவட்டும் சிந்தனைச் செந்தீ' என்று லட்சிய வெறியோடு உழைத்து வருகிற ஒரு சிலரிலே ஒருவர் தான் கோரநாதன்.

நண்பர் கோரநாதனை உங்களுக்கு நன்றாகத் தெரியும். 'கோயில்களா மூடுங்கள் !' 'சினிமாவில் கடவுள்கள்' 'ஈட்டிமுனை' 'எப்படி உருப்படும்?' கோடு கல்தா' ஆகிய தீப்பொறிகளைத் தந்த கோரநாதன் இன்னும் பல எண்ண மணிகளை அறிவின் சுடர்களை, சிந்தனைக் கனல்களை தமிழுலகுக்கு அளிக்க எண்ணியிருக்கிறார். அந்தப் புதிய வரிசையின் முதல்ச் சுடர்தான் 'அறிவின் கேள்வி'

மனித குலத்தின் தவறுகளையும், சமுதாயத்தின் சிறுமைகளையும், வாழ்வின் வஞ்சனைகளைம், ஊழல்களையும் உணர்ந்து குமுறிக் கொதிக்கும் எரிமலை உள்ளத்தாராய கோரநாதனின் எண்ணமும், எழுத்தும் சுடும் நெருப்புப் பொறிகளேயாகும் என்பது நீங்கள் அறிந்ததே. இந்தப் புத்தகமும் இனிவரும் நூல்களும் இதையே நிரூபிக்கும்.

— பதிப்பகத்தார்

# அறிவின் கேள்வி

## சிந்தனை சந்தேகிக்கிறது

நாட்டிலே அறிவின் விழிப்பு ஏற்படுவதை, சிந்தனைப் பொன் ரேகைகள் — அறியாமை அந்தகாரத்தைத் தாக்கி யடித்து — எங்கும் பரவுவதை, பெரும்பாலோர் விரும்பவில்லை எனத் தோன்றுகிறது.

இதில் வியப்பில்லைதான். அறிவு ஒடுக்கப்பட்டு அஞ்ஞான இருள் அசுர ஆட்சி புரிகின்ற காலத்து, ஆரவாரித்து வாழ்கின்ற ஆந்தைகளும், குதூகலக் கோலகல லீலைகள் புரிய முடிகிற கூகைகளும் உதயத்தின் செவ்வொளியையோ, அதன் முன்னறிவிப்பான விடிவெள்ளியையோ கண்டு மகிழ்ந்துபோக முடியாதுதான். கலவரப்பட்டு காட்டுக் கூப்பாடு போடலாம்.

இன்றையத் தமிழ் நாட்டிலே நடப்பது அதுதான். அறிவு வளரக்கூடாது; மக்களின் சிந்தனைத் திறனைத் தூண்டிவிடக்கூடாது; மக்களை மனிதர்களாக்க 'தோழர்களே, எண்ணிப்பாருங்கள்! தூங்கிக் கிடப்பானேன்? இன்றைய நிலை இது. இனியும் இப்படியே வாழ விரும்புகிறீர்களா?' என்று விழிப்பூட்டக்கூடாது. — இவ்விதம் செய்வது தவறு இப்படிச் செய்கிறவன் சமுதாய விரோதி, தர்மத்தின் விரோதி என்றெல்லாம் அலறுகிறார்கள் ஆண்டாண்டு தோறும் தர்மம், மதம் கடவுள், விதி எனப் புலம்பி வாழ்கிறவர்கள்.

நாட்டிலே நாத்திகம் பரவி வருகிறதாம். சம்பிரதாயக் குட்டையில் ஊறிய மட்டைகள் சீறுகிறார்கள். கண்டனங் கள் எறிகிறார்கள். ஆளவந்தாரை 'அச்சோ ஆள்பவரே, ஆபத்து வந்ததையே!' என்ற தன்மையில் பிரார்த்திக்கத் தயாராகிறார்கள். பத்திரிகைகளின் பக்கங்களிலே பத்தி பத்தியாய் எழுதியும், எங்கெங்கோ பேசியவர்களின் பிரசங்கங்களை அச்சிட்டும் தர்மத்தை, கடவுளை இன்னும் பலவற்றையும் பாதுகாக்கத் தவிக்கிறார்கள் பக்தர்களும், அவர்கள் பரம்பரையில் வந்த சிகாமணிகளும்.

காரணமென்ன? கடவுளைச் சந்தேகிப்பவர்களின் தொகை வளர்ந்து வருகிறதாம், கடவுள் இல்லை என்பவர் களும், 'கடவுள் இருக்கிறாரா? உண்மையாகவா?' என்று தலையைச் சொறிகிறவர்களும் சமுதாயத்துக்குத் தீங்கு இழைப்பவர்களாம்! அறிவியக்க வாதிகள் ஆபத்தானவர்க ளாம்.

இப்படிச் சொல்கிறவர்கள் தான் அறிவுக்கும் மனித வர்க்கத்திற்கும் நல்லது செய்கிறவர்களா என்ற சந்தேகம் சிந்தனையாளர்களுக்கு எழாமல் போவதில்லை.

பார்க்கப் போனால், 'நாத்திகம் பேசி நாத்தழும்பேறிய வர்கள்' இந்த விஞ்ஞான யுகத்தின் விளைவுகள் அல்ல. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆண்டவனைப் பற்றி ஐயுறு வோரும் அவனியில் இருந்து வந்திருக்கிறார்கள், கண்மூடி அர்ச்சித்து 'அரகர' என்று கன்னத்தில் அடித்துக்கொண் டவர்கள் கூடவே. கடவுளின் பெயரால், மதத்தின் வெறி யால், பக்தியின் போர்வையால், கத்தியை உருவி ரத்தம் சிந்தத் துணிந்தவர்கள் மலிந்திருக்கிற காலத்திலேயே இருந்திருக்கிறார்கள் 'புத்தியை உபயோகிக்கக்கூடாதா?' என்று மக்களிடம் கேள்வி எறியத் துணிந்தவர்களும்.

உலக நியாதியை, உயிர்க்குல அவதியை, மக்களின் வாழ்வு நிலையை கவனித்து மனித உணர்ச்சியோடு சிந்தித்துப் பார்க்கிற எவரும் 'கடவுள் என ஒருவன் இருக்கின்ருனு?' என்று சந்தேகிக்காமல் இருக்க முடியாது. தன் எண்ணத்தை சொல்லிலே, எழுத்திலே, கதையிலே தீட்டத் துணியும் போது, சிந்திக்க விரும்பாதவர்களும், பிறர் சிந்திப்பதை விரும்பாதவர்களும் சீற்றம் கொள்கிருர்கள். சிரித்து ஒடுக்கிவிட முடியாது, அறிவு வளரவே செய்யும் என்று உணர்ந்தால், ஆவேசம் கொண்டு அடக்குமுறையாளர்களாகிவிடுவார்கள்.

'என் பாட்டன் பட்டை நாமம் போட்டிருந்தான்: நானும் தீட்டுகிறேன்...' 'என் அப்பனும் மாமனும் சுப்பனும் குப்பனும் விபூதி பூசிஞர்கள்; ஆகவே நானும் துலாம்பரமாக அள்ளிப் பூசுகிறேன்' என்ற கணக்கிலே, அர்த்தம் உணராமல், பழக்கத்தின் அடிமைகளாய் — பட்டம் பதவிகள் பெற்றவர்களாயினும், அறிஞர்கள் ஆசிரியர்கள் என்றெல்லாம் அழைக்கப்படுபவர்களாயினும் — தர்மம் வழுவாமல் காத்து வருவதாக வெளிச்சம் போடுகிறவர்கள் அறிவின் விழிப்பை ஆதரிக்கமாட்டார்கள். இதற்கு இன்றைய நாட்டு நடப்பு நல்லதோர் எடுத்துக்காட்டு.

கடவுள் இல்லை என்று சொல்பவர்கள் அதிகரித்துவிட்டார்களாம், இதற்கு அசெம்பிளியிலே கேள்விகள் பிறக்கும். வாழ்விலே நேர்மையாக வாழமுயன்று முடியாமல், வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்டிருப்பதால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் இயலாமல், பிழைப்புக்கு வழியின்றி—வாழ்வின் இன்றியமையாத் தேவைகளைப் பெறக்கூடத் துப்பின்றி அல்லாடுகிறவன் அயோக்கியர்கள் வாழ்வதைக் கண்டு குமுறிஞல், குமுறலின் விளை

வாக எங்கோ இருப்பதாகச் சொல்லப்படுகிற கடவுளைக் காய்ந்தால் — அவ்விதம் காய்ந்து குமுறுகிறவர்களைக் கதையிலே புகுத்திப் படமாக்கி வெள்ளித் திரையிலே துள்ளவிட்டு, மக்களின் உள்ளத்தில் உண்மை உணர்ச்சியையும் மெள்ள மெள்ள வளரவிட்டால், நாட்டிலே ஒரு சிலரின் கூப்பாடு 'படத்தைக்காட்ட அனுமதித்ததே தப்பு!' என்று. ஏட்டுக்கார முத்தண்ணாக்கள் தீட்டுகிறார்கள் நாத்திகப் பிரச்சாரமென்று.

இந் நிலைகண்டு சிந்தனை சிரிக்காமல் என்ன செய்யும்? பச்சை வாழைமட்டை பற்றி எரியும், ஏழு பிள்ளைகளைக் கிணற்றிலே தள்ளலாம்; பத்தினி என்றால் கணவனைத் தாசி வீட்டுக்கும் சுமந்து செல்வது தான் நம் நாட்டுப் பண்பாடு; மகவைக் கறி சமைத்துத் தரும்படி கேட்கும் சாமி; காம நாடகங்கள் ஆடுகிற கயமைத்தனக் கடவுளர்கள்பற்றியெல்லாம் புத்தகங்கள் இனம் பதிப்பு, மலிவுப் பதிப்பு, உயரிய பதிப்பு என்று தயாரித்து விநியோகிப்பது அறிவுடைமை போலும்! இத்தகைய கதைகளையே படமாக்கிக் காட்டுவதுதான் தர்மத்தின் பாதுகாப்பு போலும்! இந்த விதமான அறியாமைக் கருத்துக்களை வளர்த்துவர உரிமை உண்டு; ஆனால், சிந்திப்பவர்களுக்கு ஏற்படுகிற இயல்பான சந்தேகங்களை ஒலிபரப்ப உரிமை இருப்பது தவறாம்! அந்தகார இருளிலே சிக்கித் திணறி மந்த புத்தி படைத்து விட்ட அறிவாளிகள்' அலறத் தொடங்குகிறார்கள் மதத்துக்கு ஆபத்து; கடவுளுக்கு ஆபத்து; பிரமத்துக்கு, நாட்டுக்கு, நமக்கே ஆபத்து' என்று.

சிந்திப்பவர்களை எண்ணிச் சீறுவதன் முன்பு, சிந்தனைக்குக் கொஞ்சம் வேலை கொடுங்கள் என்று சொல்ல வேண்டியது அவசியமாகிறது மற்றவர்களுக்கு 'கடவுள்

இருக்கிறாரா? அப்படி ஒருவர் இருந்தால் உலகிலே— ஏனய்யா இந்த அக்கிரமங்கள், அநியாயங்கள், உயர்வு தாழ்வுகள், கொடுமைகள்? இதையெல்லாம் நீர் ஆராய்ந்து பார்த்தது உண்டா?' என்பன போன்ற கேள்விகளை முதன்முதலாக நாங்கள் துவக்கிவிட வில்லை. ஈரோட்டுப் பெரியாரோ, வேறு சிலரோ கிளப்பிவிடவில்லை. எவ்வளவோ காலமாக எத்தனை எத்தனையோ பேர்கள் பேசியும் எழுதியும் ஆராய்ந்து வருகிற பிரச்னைகள்தான் இவை, பின் இன்று ஏதோ திடீரெனத் தோன்றிவிட்டது என மயங்குவானேன்?

கடவுளைப்பற்றிச் சந்தேகிக்கத் தொடங்கினால், 'புகை உள்ள இடத்தில் தீயுண்டு என அனுமானிப்பது போல உலகில் உள்ள சிருஷ்டிப் பொருள்களை யெல்லாம் காணும் பொழுது, இவற்றை ஆக்கிய ஒருவன் இருக்க வேண்டும் என்று அனுமானிப்பது அவசியம்தானே? என்கிறார்கள். அவர் எங்கே, எப்படியிருப்பார் என்றெல்லாம் கேட்டவர்களுக்கு 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்று சொல் அம்மானை வீசினார்கள். மனிதர்களைப் போலவே இருப்பான் என்கிறார்கள்.

'புரிந்துகொள்ள முடியாத மர்மசக்திதான் என்னவோ அது எனக்குத் தெரியவில்லை. அதை கடவுள் என அழைக்க நான் விரும்பவில்லை. ஏனெனில் கடவுள் என்பதற்கு மக்களிடையே நான் நம்பிக்கை கொள்ளாத எவ்வளவோ பொருள் ஏற்பட்டுவிட்டது. மனித உருவிலே கடவுள்—அல்லது உயர்ந்த ஒரு சக்தி—உண்டு என்று எண்ணக்கூட முடியவில்லை என்றால். இப்படிப் பலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்கிற விஷயமே எனக்கு முடிவிலா விந்தையாகத்தான் விளங்குகிறது.'

இப்படி நான் சொல்லவில்லை. பகுத்தறிவு இயக்கத் தோழர்கள் யாரும் எழுதி வைக்கவில்லை இந்நாளைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு தம் நூலில் ('Discovery of India') குறித்திருக்கும் கருத்து இது.

நாங்கள் சொன்னால், நாத்திகம் பேசுகிறோம் என்பார்கள் நாட்டிலே செல்வாக்குப் பெற்றுவிட்டவர்கள்.

மனித உருவிலே கடவுள் உண்டு என்று பலர் எண்ணிக்கொண்டிருப்பதே பெரும் விந்தை என மதிக்கிறார் நேரு. ஆனால் இங்கு அதைவிட அபார அற்புத விந்தைகள் உண்டு. மனிதரைப் போல கடவுளர்களுக்கு மனைவி மக்கள், வாகன வசதிகள், சாப்பாடு பூஜை விழாக்கள், ஆடம்பர நகைகள் பட்டு பட்டாடைகள், பாலாபிஷேகங்கள், பள்ளியறைச் சம்பிரமங்கள் எல்லாம் செய்துவைக்கப் படுகின்றன. பணமும் மக்களின் உழைப்பும் காலமும் பாழடிக்கப்படுகின்றன. சோம்பேறிகளையும், வீணர்களையும், எத்தர்களையும், பூனைத்தனப் புல்லர்களையும், நரித்தன நயவஞ்சகர்களையும் பெருத்துக்கொழுத்திட உதவுகின்றன.

கடவுளைக் குறை கூறினால், கடவுள் கேட்பார் என்பார்கள். கடவுள் யாரையும் எதற்காகவும் 'கேட்டு' விட்டதாகத் தெரியவில்லை. அவரது பண்பை, நியதியைப் பற்றி அறிவுக்குப் பொருத்தமான கேள்விகள் கேட்டு, சிந்தனைக்கு விருந்தளிப்பவர்கள்தான் அதிகரித்து வருகிறார்கள், காலப் போக்கிலே.

அறிவுத் தாகம் பெற்றவர்கள் மட்டுமே கடவுளின்—கடவுள் தத்துவத்தின்—சிறுமைகளைப் பற்றி சிந்தித்துச் சொல்லுதிர்த்தார்கள் என்றில்லை. பக்தி செய்து முற்றிப் போய், வாழ்வின் வறட்சி உளத்தைத் தீய்க்க மனம் கசந்து

விரக்தியோடு பேச வந்தவர்களே உலகெலாம் ஆக்கிய அப்பனைப் பற்றி என்னென்னவோ சொல்லத் துணிந்தார்கள் என்று ஒதுக்கிவிட முடியாது. வெற்றி மிடுக்கோடு முன்னேறிய ஒரு சிலரும் தம் ஆடம்பர வாழ்வின் நடுவிலும் இவ்விதச் சந்தேகங்களை உதிர்த்திருக்கிறார்கள் என்பதற்குச் சரித்திரம் சான்று.

வெற்றி மேல் வெற்றி பெற்று முன்னேறிய நெப்போலியன்கூட 'உண்மையில் கடவுள் என ஒருவன் இருக்கிறானா? நீதிமான் எனப்படுகிற ஒருவன் இருந்தால் உலகில் வாழ்க்கை நிலை இப்படி இருப்பானேன்? நேர்மையாளர்கள் வாடுகிறார்கள். அயோக்கியர்கள் சுகமனுபவிக்கிறார்களே!' என்று சொல்லியிருக்கிறான்.

முசோலினி ஒருசமயம், மதப்பிரச்சாரம் செய்துகொண்டிருந்த பாதிரி ஒருவன் முன் போய், 'கடவுள் இருக்கிறார், அவர் எல்லாம் வல்லவர் என்றால், என்னை இதோ ஐந்து நிமிஷங்களில் இந்த இடத்திலேயே செத்து விழச் செய்யட்டும்' என்றுசொல்லி, பாக்கெட் வாட்ச்'சை எடுத்து நீட்டியபடி நின்றாராம். பாதிரி என்ன செய்ய முடியும்? 'சைத்தானே, தூரப்போ!' என்றார். முசோலினி சரியாக ஐந்து நிமிஷங்கள் கழித்ததும், கடியாரத்தை சட்டைப் பைக்குள் திணித்தபடி கம்பீரமாக நடந்தாராம்.

சரித்திரம் குறித்து வைத்திருக்கிற—அல்லது, குறித்து வைக்கத் தவறிவிட்ட — இத்தகைய உதாரணங்கள் எத்தனையோ இருக்கலாம்.

அதெல்லாம் எதற்கு? ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் எப்பொழுதாவது 'கடவுள் இருக்கிறாரா? உண்மையாகவே, நீதியும் நேர்மையும் தர்மசிந்தையும் அன்பும்

நிறைந்த கடவுள் உண்டா?' என்று தன் மனத்தினுள்ளேயே கேட்டுக்கொள்ள வேண்டிய நெருக்கடி வராமல் போவதில்லை சிந்தனை இவ்விதம் சந்தேகக்குரல் எழுப்புகிறபோது, பெரும்பாலோர் சிந்தனையை மேலும் வளரவிடுவதில்லை அவர்களை அடிமைப்படுத்தியிருக்கும் பழமைக் கட்டுப்பாடுகள் தலைதூக்கும் சந்தேகத்தை மண்டையில் அடித்து ஒடுக்கிவிட்டு, கடவுளுக்கு பஜனையும், நாமாவளியும் பாடுவதில் ஈடுபடத் தூண்டிவிடுகின்றன.

வரவர, சிந்தனை வளர்ந்து வருகிறது; அதனால், சிந்தனையின் சந்தேகமும் ஓங்குகிறது. இதை யாரும் மறுக்க முடியாது. என்றுமே பழமை இருளில் உலகைப் புதைத்துவிட்டு அறியாமையை அரியாசனத்தமர்த்தி அர்ச்சனைகள் செய்யலாம் என்று எவரேனும் எண்ணினால், அவர்களின் தவறை காலம் எடுத்துச் சொல்லும். சந்தேகம் தான் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை மக்கள் சந்தேகித்து, ஆராயத் தொடங்கிவிட்டார்கள் என்றால், உண்மையை நோக்கி அவர்கள் சிந்திக்கத் திரும்பிவிட்டனர் என்றுதான் அர்த்தம். அறிவின் உதயத்துக்கு அஸ்தமனச் சங்கு ஊதிவிடலாம் என எண்ணுவது வீண் கனவு.

அறிவின் திறமையும், சிந்தனை உண்மையும் வேகமாகப் பரவுவதில்லை காரணம், மக்கள் இன்னும் முழு மனிதராக வாழக்கற்றுக் கொள்ளவில்லை. மனிதவர்க்கம் இன்னும் பிள்ளைப்பிராயத்திலேயே தவழ்ந்து கொண்டிருக்கிறது என்றுதான்சொல்லவேண்டும். எனினும், துணிந்து, உண்மைக்காக உண்மையைக் காதலித்து, அறிவு விழிப்போடு ஆராய்ந்து தங்கள் எண்ணத்தைச் சொன்னவர்களுக்கும் குறைவில்லை. அத்தகைய அறிஞர்களின் சிந்தனை

மணிகள் காலக் கடல் அலைகள் காப்பாற்றி நமக்களிக்கும் முத்துக்களாகும். உலக மணல் வெளியிலே நமக்குக் கிடைக்கிற அற்புத மணிகளாகும்.

இத்துடன் நான் இணைத்திருக்கிற "அறிவின் கேள்வி" சிந்தனையில் தோன்றிய ரத்தினம். உண்மை ஒளிரும் அறிவுச்சுடர். வின்வுட் ரீட் என்பவர் எழுதிச் சென்ற நூல் ஒன்றில் உள்ள சில பக்கங்களின் தமிழாக்கம் இது. உலகத்தின் கதையை, உயிர்க்குலச் சரிதையை, மனிதன் காலப்போக்கிலே அனுபவித்த வேதனைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ள அந்நூலில் மதம், கடவுள் முதலிய பிரச்னைகளைக் குறித்து தமது எண்ணங்களை அழுத்தமாக வரைந்திருக்கிறார் அவர். அவரது சிந்தனையின் உயர்வை; நேர்மையை, ஒழுங்கை, அழுத்தத்தை பின்வரும் பக்கங்கள் நிரூபிக்கும்.

சிந்தனையின் முடிவல்ல அது. சிந்தனைக்கு முடிவே கிடையாது. சிந்திக்கத் தூண்டும் சிறந்த கருத்துக்கள் கொண்டது. கடவுள் தத்துவத்தை, கடவுளுக்காகப் பரிந்து மக்கள் பேசுகிற வாதங்களைப் பிரித்துப் பிழிந்து பார்த்து அத்தனையும் சாறில்லாச் சக்கையே என்று ஒதுக்கிவிடும் அவரது திறனையும் துணிவையும் பாராட்டத்தான் வேண்டும். இத்தகைய சிந்தனையாளர்கள் இன்று நாட்டுக்கு அதிகம் தேவை.

- கோரநாதன்

★

# அறிவின் கேள்வி.

## (லின்வுட் ரீட் எழுதிய நூலில் கண்டபடி)

உலக வழக்கு இது.

ஆதிமுதல்வன் ஒருவனால் ஆக்கப்பட்டது இவ்வுலகு. அவன் தன்னைப்போலவே மனிதனையும் படைத்தான். அதனால் மனிதனின் உள்ளமும் தேவனின் உள்ளத்தைப் போல்தான். ஆனால் மனிதருள்ளம் பூரணத்துவ மற்றதால், உணர்ச்சிகள் அலைமோதுவதாய், ஆசைகள் வளர்ந்து பாபக்கறை படிந்ததாய், குறுகிய சக்தி பெற்றதாயிருக்கிறது. அவனது உள்ளமோ, அழகின் ஆலயம்; சக்திகளின் பூரணம்; அன்பின் முழு உரு. அவன் சர்வ வல்லமை பொருந்தியவன். எங்குமிருப்பவன். தான் படைத்த மனிதர்களிடம் அவனுக்கு அன்பு உண்டு ஆனால் அவர்களது போக்கைக் கண்டு துயருறுகிறான். சும்மா சோதனை ரீதியாகத்தான் மனிதர்களை பூமியிலே படைத்திருக்கிறான் பாபம்செய்தாலும், பச்சாதாபப்பட்டு மனம் உருகுவோரை தவறை உணர்ந்து தங்களைத் தாழ்த்துவோரை—எளியவர்களை—அவன் மன்னித்து அழிவிலா இன்பம் அருளுவான் கொடியோராய், கல் நெஞ்சம் பெற்றவர்களாய், முரண்டு பிடிப்போராய் வாழ்கிறவர்களை — அவனது ஆக்கினைகளை மறுப்போரை, அவனை எதிர்ப்போரை—அவனது ரீதியின் படி அவன் தண்டிப்பானாம். இந்தச் சன்மானமும், இவ்விதத் தண்டனைகளும், உலகிலே மனிதன் வாழ்க்கையில் உடலுள் உறையும் ஆத்மாமீது சுமத்தப்படும். இந்த ஆத்மா என்பது மனம், அறிவு ஆகியவைகளினின்றும் தனியானது. கடவுளின் சந்நிதியிலே ஏழையின் ஆத்மாவுக்கும், பணக்காரன், பெரிய தத்துவஞானி, சிறந்த கவி போன்றோரது ஆத்மாக்களுக்கும் பேதமே கிடையாது.

ஆட்களை மதிப்பவன் அல்ல அவன். ஆத்மாக்களை அளவிடுபவன் ஆண்டவன். பாபம் அவன் போடுகிற எடை. ஆனல், அறியாதவன் செய்த பாபங்கள் மன்னிக்கப்படும். அறிவொளி பெற்றவன் செய்த பாபங்களுக்கு அவன் தீர்ப்பின்படி கடுமையான தண்டனையாம்...

இதை நாம் அலசிப் பாராதவரை, இது மிகவும் நியாயமான சித்தாந்தம் தான் என்று தோன்றும். ஆனல், இது எப்படியெல்லாம் வளைந்து கொடுக்கும், இதன் தன்மை யென்ன என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், மடத்தனத்தின் எல்லைக்கேயிது நம்மை கொண்டுசேர்க்கும்.

முட்டாள்களின் ஆத்மா—அவர்கள் செய்த பாபங்களுக்கும் பொறுப்பில்லையாகையால்—நேரே சொர்க்க லோகம் போக முடியும். கதே, ரூஸோ போன்றவர்களது ஆத்மாக்கள் நிரந்தரமாய் நின்றெறியும் நரகத் தீயிலே கருக வேண்டும். ஆகவே, ஒரு கதேயாகவோ, ஒரு ரூஸோவாகவோ பிறப்பதைவிட, ஒரு மடையனுகப் பிறந்து வாழ்வது மேலானது. அப்படித்தானே ? என்ன பேதமையிது!

ஆத்மாவின் அமரத்துவமும், என்ருே கிட்டுவதற்காக காத்திருக்கும் இன்பமும், இன்று பூமியிலே கஷ்டப்படுகிறவர்களுக்கு, எவ்விதத் தவறும் செய்யாதவர்களுக்குச் சரியான மாற்று என்று சொல்லப்படுகிறது. உண்மையில் அதுமாதிரி ஒன்றுமில்லை இந்த சித்தாந்தம் தீமை எப்படிப் பிறந்தது, உலகில் ஏன் தீமை நிலவுகிறது என்றெல்லாம் விளக்கக் காணும். அப்பாவியான, செயல் திறன் எதுவு மற்ற, குழந்தை இந்த உலகுக்குத் தள்ளப்படுகிறது. யாருக்கும் எவ்விதத் தீங்கும் நினைக்கவில்லை அது. என்ருலும் மிகக் கொடிய முறையிலே அந்தச் சிசு சித்திரவதை

செய்யப்படுகிறது பாபத்தில், குற்றத்தில், வியாதிகளில் போட்டு வதக்கி எடுக்கப்படுகிறது. இவற்றாலேயே வளர்க்கப்படுகிறது. இப்படிச் சிலகாலம் வாழ அனுமதிக்கப்பட்டு பின் சாகடிக்கப்படுகிறது.

ஐயா, உடனடியாக அது அந்தரத்துச்சுந்தர சொர்க்க லோகத்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று சொல்வது ரொம்பச் சரி. ஏனய்யா அதை முதலிலேயே இன்ப புரிக்கு நேராக அழைத்துச் சென்றிருக்கப்படாது? ஒருவனுக்கு ஒரு குழந்தை இருக்கிறது; காரணமில்லாமல் அவன் அதை உதைக்கிறான். அப்புறம் மிட்டாயும் ஷர்பத்தும் அதற்கு கொடுக்கிறான் என்பதனால் அவன் செய்கிற அநியாயம் சரிப்பட்டு போகுமா?

ஆகவே 'ஆக்கியோன் எனப்படுகிற ஆசாமியின் குணத்தை நாம் ஆராய வேண்டியது அவசியமாகிறது. இறைவன் என்று மக்களால் போற்றப்படுகிற பண்பையே நாம் ஆராய்கிறோம் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

மிக உயர்ந்த கடவுளுக்கு மனம் உண்டு என்கிறார்கள். இதை நாம் ஆட்சேபிக்கிறோம். நல்லதுக்காகவே இப்படி நாம் கண்டிக்கிறோம் என்று காட்ட, இருப்பதாகச் சொல்லப்படுகிற அந்த மனதைப் பற்றி விமர்சிப்போம்.

முதலில், மனிதர்களை அவர்களது நலத்துக்காக அல்லாமல் வேறு எதற்காகவும் சிருஷ்டிக்க கடவுளுக்கு உரிமை கிடையாது என்று மறுக்க முடியாத தார்மீகமான ஒரு முக்கியப் பிரச்னையை ஆணித்தரமாக அறைகிறோம். இது விசித்திரமான வாதம் என்று உமக்குத் தோன்றலாம். ஆனால், நீர் பதினலாவது லூயி காலத்திலே பிரான்சில் இருந்திருப்பீராயின், மக்களுக்காகத் தான் மன்னனே

தவிர, மன்னனுக்காக 'மக்கள் அல்ல என்று எழுந்தகோஷம் கூட உமக்கு விபரீதமாகத்தான் தொனித்திருக்கும். டியூக் ஆவ் பர்கண்டி முதன் முதலில் இந்த நியாயத்தை அறி வித்தபோது, ஸெயின்ட் ஸைமன் — அடிநக்கும் அரண் மனைவாலா அல்ல அவர்; மேலும், அக்காலத்திய அறிவுப் பிழம்புகளில் அவர் ஒருவர் — 'கூற்றின் தாராளத் தனத் துக்காக மகிழ்ந்து'போனார். 'ஆனால் அதன் புதுமையில் திடுக்கிட்டு, துணிச்சலுக்காக அஞ்சிவிட்டார். நமது கூற்று விநோதமாகப்படலாம், ஆனால் அதை ஆட்சேபித்து ஒதுக்கிவிடமுடியாது. நமது சிருஷ்டிகர்த்தா மகாப் பெரிய வர்; அதனால் நமது தர்ம நியாயங்களுக்கெல்லாம் அப்பாற் பட்டவர் என்று சொல்வதானால், உரிமைக்கும் மேலாக தடித்தனத்தை பூஜிப்பதல்லாமல் வேறென்ன இது என்று கேட்கிறோம். சரி, நமது கோஷம் சரியானது என்று ஒப் புக்கொள்வதானால், இன்றைய வாழ்க்கைத் தத்துவம் நியாயமானது என்று எப்படி நிரூபிக்க முடியும்?

கடவுள் எல்லாம் வல்லவராம். அதே வேளையில் கருணைக்கடல் என்றும் கூறப்படுகிறது. ஆனால், ஒன்று மற்றொன்றை வெட்டும் கூற்று. அவர் சக்தியின் பூரணன் என்றும், புனிதத்தின் பூரணனும் அவனே எனவும் கூறப் படுகிறது. அவன் ஒருவனே இவ்விரு பண்பினையும் இருக்க முடியாது என்பதை நாம் விளக்குவோம்.

தந்தை தன் குழந்தையிடம் நடந்துகொள்ளும் முறை கொடியதாய் தோன்றும். உண்மையில் அது கொடுமை அல்ல. அவன் பிள்ளையை அடிக்கிறான்.* அது மகவின் நன்மைக்காக. அவன் சர்வ வல்லமை உள்ளவனல்ல. ஆகவே, இரண்டு தீங்குகளில் எதையாவது ஒன்றை அவன்

ஆதரித்துத்தான் ஆகவேணும். ஆனால், கடவுள் எல்லாம் வல்லவர் ஆயிற்றே! ஆகையினாலே, அறிவு புகட்டவும், வளர்ச்சிக்கும் வழியாகக் கொடுமையைக் கடவுள் கையாளுகிறார் என்றால், கடவுளுக்குக் கொடுமை பிடிக்கிறது என்றாகிறது. இல்லையெனில் கொடுமையை ஆதரிக்கமாட்டார். ஆதலால் கொடுமையில் ஒரு மோகமிருக்கிறது அவருக்கு. இல்லையெனில், அதை அவர் விரும்பமாட்டார். கொடுமையில் ஆசை உண்டு, ஆதலால் அவர் கொடியவராக இருக்கிறார் என்றால், அது மடத்தனம்.

இன்னொன்று. கடவுளின் கருத்துக்கு மீறி பாபம் இந்த உலகத்திலே புகுந்திருக்க வேண்டும். அப்படியானால் அவர் சர்வ வல்லமையுள்ளவர் அல்லர். அல்லது அவரது அனுமதியோடுதான் பாபம் வந்திருக்க வேண்டும். அப்படியெனில், பாபம் அவரது ஏஜண்டு. அவ்வாறாயின், பாபத்தை அவர் தேர்ந்தெடுத்திருக்கிறார். அதனால் அவர் பாபத்தை நேசிக்கிறார் என்றாகிறது. அதனால் பாபத்திடம் அவருக்கு மோகம் என்று ஏற்படுகிறது. அப்படியானால் அவரே பாபிதான். ஆக இதுவும் முட்டாள்தனமேயாகும்.

கெட்டதை விட நல்லது உயர்ந்தது. நன்மை எப்பொழுதும் வளர்ந்து கொண்டே இருக்குமாம். தீமை குறைந்தே வருமாம். அது சரி; அன்பே கடவுள் என்றால் ஏனய்யா இந்தத் 'தீமை' தான் தலைகாட்ட வேணும்? ஒருவேளை, நாடகச் சுவை விரவியோட, வேணும் என்பதற்காக வில்லன்கள் வந்து விளையாட, பின் மூன்றாவது பாகத்திலே தான் தர்மம் வெல்லும் என்கிற பண்புகளுடைய நாவல்தானே இந்த உலகம்? என்ன இருந்தாலும், சிருஷ்டித்துவிடப் பட்ட ஜீவன்களின் உணர்ச்சிகளைப்

பற்றி ஒரு சிறிதாவது அவன் எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லையே!

உண்மையாகவே 'தீர்ப்பு நாள்' என ஒன்று இருக்குமானல், அதிலே மனிதன் ஆஜராக்கப்பட வேண்டியது குற்றவாளியாக அல்ல; குற்றம் சாட்டுவோனுகத் தான் வரவேண்டும். ஆசைகளைத் தூண்டி, சித்திரவதைகளுக்கு ஆளாக்கும் வாழ்விலே உழல வேண்டும் என்பதற்கு அவன் என்ன பாபம் செய்தான்? கடவுள் நம் எல்லோரையும் ஆனந்தம் அனுபவிப்பவர்களாகப் படைத்திருக்கலாம்; ஆனல் நம்மைத் துயரப்பட வேண்டியவர்களாக ஆக்கிவிட்டான். இதுதான் கருணையா? கடவுள் நம்மையெல்லாம் புனிதர்களாகப் படைத்திருக்கலாம். ஆனல் எல்லோரையும் அவன் பாபிகளாகப் படைத்துவிட்டான். இதுதான் தர்மத்தின் பூரணமோ?

மனிதன் சிருஷ்டித்துள்ள இந்தக் கடவுள் இருக்கிறரென நான் நம்புவதானல், நான் சொல்வேன்: 'கடவுளே, உமது உலகிலே உயிர் வாழும்படி நீர் என்னை ஆட்டிவைக்கலாம். ஆனல் அதை வியந்து பாராட்டும்படி நீர் என்னை மாற்றிவிட முடியாது நீர் என்னைச் சங்கிலிகளால் பிணிக்கலாம் ஆனல் உம் புகழ் பாடும்படி என்னைத் திருத்த முடியாது. நீர் என்னைப் பழிப்பீரானல், அது உம்மையே தூற்றிக் கொள்வதாகும். நான் பாபங்கள் செய்தேன் என்ருல், அந்தப் பாபங்களை உண்டாக்கியதும் நீர்தானே? நீர் செய்த கடிகாரம் சரியாக ஓடவில்லையானல், அது எவர் தவறு? உருளைகளையும் கம்பிகளையும் சபிப்பது தானே அறிவுக்குப் பொருத்தம்?'

உண்மையில், இயற்கை ஏட்டின் பக்கங்களை புரட்டும் பொழுது—ரத்தத்தாலும் கண்ணீராலும் எழுதப் பெற்ற காவியம் அது என உணரும் போது தான்—

வாழ்வை நிர்ணயிக்கிற விதிகளைக் காணும் போது, வளர்ச்சிக்கு அடிப்படையான சட்டங்களை அறியும்போது தான்—அன்பே கடவுள் என்கிற சித்தாந்தம் எத்தகைய மயக்கு என்பதை நாம் தெளிவாகக் காண்கிறோம். கொடுமை, சீரழிவு, வெறுத்தொதுக்கப்பட்ட பாழ்மை இவைகளையே அனைத்திலும் காண்கிறோம். பிறக்கின்ற பிராணிகள் எல்லாவற்றிலும் ஒருசில தான் உயிர்வாழ முடிகிறது. இந்த நியதியினால் தான் வளர்ச்சி நீளுகிறது. சாகடிக்கும் விதியே வளர்ச்சிக்குரிய சட்டம். நீண்ட சோக நாடகமே வாழ்க்கை. சிருஷ்டி மகத்தான குற்றம். மிருகங்களின், மனிதர்களின் வாழ்வில் மட்டுமே வீணடிப்பு என்பதில்லை. தார்மீக வாழ்விலும் வீண் வேலைதான் அதிகம். மனித உள்ளத்திலே முளையெடுத்திருக்கிறது அன்பு உணர்வு. அது சிலருக்கு ஆறுதல். மற்றவர்களுக்கோ வாதனை. அன்புக்கு ஏங்கும் எத்தனை உள்ளங்கள் தனிமையிலும் **பனித்தனத்தாலும்** பாழாகின்றன! இப்படி இருந்திருக்கலாகாதா என இன்பக்கனவு தேக்கி அடுப்பங் கரையிலே வாடியிருக்கும் வனிதா மணிகள் எத்தனைபேர்! இவ் வார்த்தைகளைப் படித்ததும் தம் துயர் நினைவால் நீருகுக்கக் காத்திருக்கும் கண்கள் தான் எவ்வளவோ! குளிர்பாறைக் கொடிய துயரவாழ்வே! எவ்வளவு நெடியன நீ தரும் துயரங்கள்; எவ்வளவு அல்பமானவை உனது இன்பங்கள்! வருங்கால வருத்தங்களாய் மாறப் போகிற அழகுக் குழந்தைகள் தானே இன்றைய இன்பங்கள்? இன்பமென்பது ஒடும் கனவல்லாமல் வேறு என்ன?

அது வரும்பொழுது நாம் தூங்குவதுபோல் கிடக்கிறோம். அது வந்து போனதாக உணர முடிவது கண் விழித்த பின்னர் தானே! வேதனை, துயரம், வியாதி, மரணம்—இவைதானா அன்பின் சொரூபமான கடவுள் கண்டவை? மற்றவைகளை ஒழித்துக்கட்டாமல் எந்தமிருகமும் உயர்ந்து விடக் கூடாது—இதுதானா கருணாமூர்த்தியான கடவுளின் கட்டளை? சோகத்தின் பின்னால் தங்கமய நலமுண்டு; கொலையின் அடிப்படையில் ஈவும் இரக்கமும் உண்டு என்று சொல்வதால் பயனில்லை நல்லன உருவாகக் கேடுகள் தான் கருப்பொருளாய் அமைய வேண்டும் என்று வகுக்கப்பட்டிருப்பதேன்? உபயோகமுள்ளது என்பதனால் வேதனை, வேதனை குறைந்த பண்பாகிவிடுவதில்லை. வளர்ச்சிக்கு அடித்தளம் என்பதற்காக கொலை குறைந்த பட்சக் கொலையாகிவிடாது. இதோ கையிலே ரத்தம் கறையாகப் படிந்திருக்கிறது. அரேபியாவின் அத்தர் திருசுகள் அத்தனையும் இதை இனியதாக்கி விட முடியாது.

ஆகவே, நாம் முடிவுகட்ட வேண்டியதுதான் என்ன? இவ்வளவே தான்—இன்று நாட்டிலே வழங்கிவரும் சித்தாந்தம் தவறானது. கடவுளை விளக்க முயலும் காரியமெல்லாம் கேலிக்கும் சிரிப்பாணிக்கும் இடமளிக்கிறமுடிவுக்கே நம்மை இழுத்துச் செல்லும். ★

# வெளிவந்துவிட்டது

தமிழ் நாட்டு அறிஞர்கள்
பலரும் புகழும் அற்புத
நாடகம்

# நல்ல தீர்ப்பு

**D. சுந்தரம் எழுதியது**

அழகிய மூவர்ண முகப்பு

எழிலும், எளிமையும், இனிமையும்
அமைந்த வசனங்கள் !

**விலை 1-8-0 விற்பனை கழிவு 20%**

தபால் செலவு இனாம்.

தேவைக்கு எழுதுங்கள்

**ஔவை நிலையம்,**

காரை P. O.,

திருவானைக்கோயில் வழி, திருச்சி மாவட்டம்

# தயாராகிறது!

## சிந்தனைக்கு ஓர் நல்விருந்து

எதிர்த்துக்கேட்டால் 'பிடி சாபம்'
சிந்தனை செய்தால் 'சைத்தானே, போ'
விழித்திடு, உண்மை உணர்க என்றால்
'பாழ் நரகம் உனக்கு'!

இப்படி பயங்காட்டி, பயந்தவர்களை வாழ்விக்க வந்த வழிகாட்டிகள் என்று இனிக்கப் பேசி இன்பகரமாக வாழ்கிறார்கள் ஆனந்தங்கள், அடிகள், சுவாமிகள், 'கட்டைகள்', பூஜ்யர்கள், ஸ்ரீலஸ்ரீகள், சந்நிதானங்கள் வகையரா.

இத்தகையவர்களின் மனப்பண்பை,
வாழ்வின் போக்கை எடுத்துக்காட்டும்

அருமையான நவீனம்

# வாழும் திருக்கூட்டம்!

வல்லிக்கண்ணன் எழுதியது

## இது எரிமலை வெளியீடு

## விரைவில் வெளியாகும்

# நீங்கள் இன்னும் வாங்கவில்லையா?

காமராஜரின் பதட்டமான பேச்சுக்களுக்கு
ஆசைத்தம்பியின் ஆணித்தரமான

மறுப்பு

# காமராஜர்

விலை ஐந்தணா　　　　விற்பனை கழிவு 25%

* * * * * * * * *

## தயாராகிறது! ★ ★

அரசியல் அயோக்கியத்தனங்களை
அம்பலமாக்கும் அரிய நூல்
கி. மனோகரன் எழுதிய

# ஜனநாயகமா?

திராவிடத் தந்தை பெரியார் அவர்களின்
மதிப்புரையுடன் வெளிவரும்

விவரங்களுக்கு :

## தீச்சுடர் நிலையம்,

சிறுகனூர் போஸ்ட்,

திருவானைக்கோயில் வழி,　　திருச்சிராப்பள்ளி ஜில்லா.

# படித்துப்பாருங்கள் ★ ★

நேர்மையும், நன்மையும்
நிறைந்த மக்கள் உலகைக்
காட்ட வழிகூறும்

ரா. தணலின் எழுதிய

## பதில் கூறுங்கள்

விலை எட்டணா தான்

ஃ ஃ ஃ ஃ ஃ

நாரா. நாச்சியப்பன் எழுதிய

இனிய கவிதைகள்

## இன்பத் திராவிடம்

விலை 0—4—0 விற்பனை கழிவு 25%

செலவு இனாம்

தேவைக்கு எழுதுங்கள்

**எரிமலைப் பதிப்பகம்,**

துறையூர், திருச்சி மாவட்டம்.